**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 212** **நாள் : 16.06.2026**

**வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு, பக்கிங்ஹாம் கால்வாயில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக, மாநகராட்சி ஆணையர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையினை முன்னிட்டு, 44 கால்வாய்களில் தூர்வாருதல், வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உள்ள கால்வாய்களில் தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டுதல், மழைநீர் வடிகால் பணிகள், ஏரிகள் குளங்களை தூர்வாரி மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தேனாம்பேட்டை மண்டலத்தில் மழைக்காலத்தில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் மழைநீரை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளையும், மழைநீர் வடிகால்வாய் பக்கிங்ஹாம் கால்வாயில் இணையும் பகுதி, பக்கிங்ஹாம் கால்வாய் சேரும் இடமான கூவம் மற்றும் அடையாறு ஆற்றுப் பகுதி ஆகிவற்றினை மாநகராட்சி ஆணையர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இம்மண்டலத்தில் வார்டு-123க்குட்பட்ட முண்டகன்னியம்மன் கோயில் தெரு, கல்வி வாரி தெரு சந்திப்பில் உள்ள மழைநீர் வடிகால்வாய், வார்டு-124க்குட்பட்ட டாக்டர் ரங்கா சாலை பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மத்திய பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் இந்த கால்வாய் அடையாறு மற்றும் கூவத்தில் இணையும் பகுதியினை மாநகராட்சி ஆணையர் பார்வையிட்டு, இந்த கால்வாய் இணையும் பகுதியில் மழைக் காலத்தில் வெள்ள பாதிப்பின்றி, மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் தூர்வாருதல், ஆகாயத்தாமரை அகற்றுதல் மற்றும் கழிவுகள் அகற்றுதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மயிலாப்பூர், லஸ் கார்னர் பகுதியில் உள்ள நாகேஸ்வர ராவ் பூங்காவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், ரூ.12 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை, இருக்கைகள், விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**